மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தவறான உத்தரவைப் போட்டவர் மீது முறைப்படி இலாக்கா பூர்வமான நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள்.

Salaries of Teachers of Elementary Schools.

* 182 Q.—THIRU M. SANKARALINGAM & THIRU P. R THOMAS: Will the HON. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any report that the Educational Officers have directed that the salary of Teachers of the Elementary Schools would be reduced, if those schools failed to work for 220 days on account of their late re-opening after 20 days behind the scheduled time, due to the elections during the year 1977–78; and

(b) if so, the action taken thereon?

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1977–78ஆம் கல்வியாண்டில் தேர்தல் காரணமாக 20 நாட்கள் பிந்தி துவங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் 220 நாட்கள் வேலை செய்யாவிட்டால், ஆசிரியர்களுடைய சம்பளம் குறைக்கப்படும் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அரசுக்குத் தகவல் ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) இக்கல்வியாண்டில் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் மொத்தப்பள்ளி நாட்கள் 220லிருந்து 20 நாட்கள் வரை தவிர்ப்பு வழங்க ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

திரு பி. ஆர். தாமஸ்: அதே நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விதி விலக்கு அளிக்க அரசு முன் வருமா? உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 200 நாட்கள் வேலை செய்தால் போதும் என்றிருந்தாலும், தேர்தல்கள் காரணமாகவும் புயல் வெள்ளம் காரணமாகவும் சில பள்ளிகளை உடனடியாக திறக்க முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால், அத்தகைய விதி விலக்குத் தேவைப்படும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இந்த விதிவிலக்கு அளிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : அப்படியொரு யோசனை இல்லை.

Next World Tamil Conference.

* 183 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to hold the next World Tamil Conference in Tamil Nadu; and

(*b*) if so, the place where it is proposed to be held?

அடுத்த உலகத் தமிழ் மாநாடு

திரு ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடுத்த உலகத் தமிழ் மாநாட்டை தமிழ் நாட்டில் நடத்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் அதனை நடத்தக் கருதப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : (அ) அரசு இது குறித்து யோசித்து வருகிறது.

(இ) இடம் நாள் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு ஜி. சுவாமிநாதன் : இந்த ஆண்டிலேயே நடத்தலாமா என்பதையாவது அரசு முடிவு செய்திருக்கிறதா? 1978ஆம் ஆண்டிலேயே நடத்தலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : அதைக் குறித்துத் தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு ஜி. சுவாமிநாதன்: தமிழ் நாட்டினுடைய வரலாறு குறித்து சரியான முறையில் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆலோசனை செய்து வருகிறதா? அதைப்பற்றி முடிவு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தனியாகக் கேள்வி கேட்டால், விவரமாகப் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.